Registered as a NewsPaper
பக்கங்கள் 06
விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 25 (09-03-1992) திங்கட்கிழமை ஓசை: 20

## இலங்கை வங்கி, மக்கள் வங்கி

### பிரயாணி. காசோலைகள் ஏற்க வங்கிகள் மறுப்பு

இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கிக் கொழும்புக் கிளைகளினால் வழங்கப்படும் பிரயாணிகள் காசோலைகளை வெளிநாடுகளிலுள்ள வங்கிகள் ஏற்க மறுப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த வங்கிகள் இரண்டும் வங்குறோத்தாகி விட்டதாக அரசு அறிவித்ததைத் தொடர்ந்தே வெளிநாட்டு வங்கிகள் அச்சம் தெரிவிக்கின்றன. (5ஆம் பக்கம் பார்க்க)

# வரலாறு காணாத மகளிர் எழுச்சி

# வன்னியில் மாபெரும் பேரணி

(கிளிநொச்சி)

வரலாறு காணாத மாபெரும் எழுச்சிப் பேரணி ஒன்றை தமிழீழ மகளிர் நேற்று மாலை கிளிநொச்சியில் நடத்தினர். வன்னிப் பிராந்தியத்தின் பல பாகங்களிலும் இருந்து எழுச்சி கொண்ட பல்லாயிரக் கணக்கான மகளிர் இப் பேரணியில் கலந்து கொண்டனர். இப் பேரணியைத் தொடர்ந்து மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

இதே வேளை இரண்டு நாட்கள் நடைபெற்ற தமிழீழப் பெண்கள் மாநாட்டில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இம மாநாடு நேற்று நண்பகலுடன் முடிவடைந்தது.

இரணைமடுச் சந்தியிலிருந்து நேற்று மாலை நான்கு மணியளவில் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினரின் பாண்ட் இசை முழங்க அணிவகுப்புடன ஊர்வலம் ஆரம்பமானது.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினர் சமூக மேம்பாட்டுப் பணியாளர், அன்னையர் முன்னணிப் பிரதிநிதிகள் உட்பட இருபத்தையாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பெண்ணடிமைக்கெதிரான பல சுலோக அட் (5ஆம் பக்கம் பார்க்க)

## கோண்டாவிலில்

### விமானக் குண்டு வீச்சு வீடுகள் சேதம்; ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படையின் குண்டு வீச்சு விமானங்கள் நேற்றுக் காலை பத்தேகால் மணியளவில் கோண்டாவில் பகுதியிலுள்ள பொது மக்கள் குடியிருப்புகள் மீது திடீரெனக் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

நான்கு குண்டுகள் வீசப்பட்டதில் இரண்டு வீடுகள் பலத்த சேதம் அடைந்ததுடன் அமிர்தலிங்கம் என்பவர் படுகாயமுற்றார். இவர் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இப் பகுதியைச் சேர்ந்த கந்தையா நிர்மலகுமார், தர்மலிங்கம் தர்மராசா என்பவர்களது வீடுகளே பலத்த சேதமடைந்தவையாகும்.

### உணவுப் பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையிலிருந்து உணவுப் பொருள்களின் விநியோகம் சம்பந்தமாக கூட்டுற (5 ஆம் பக்கம் பார்க்க)

## மகளிர் மாநாடு காலையில் நிறைவுற்றது

விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் ஜெயா தலைமையில் நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் தேசிய மாநாட்டின் இரண்டாவது நாள் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இம்மாநாட்டில் தமிழீழப் பெண்களின் விடுதலை தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய பத்து தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டுப் பிரதிநிதிகளால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து இத்தீர்மானங்கள் அடுத்த உலக மகளிர் தினத்திற்கு முன் நடைமுறைப்படுத்த அனைத்துத் தமிழீழ பெண்களும் ஒத்துழைக்க (5ஆம் பக்கம் பார்க்க)

## பேரணியில் பல்வேறு பதாகைகளுடன் மகளிர்

நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற அனைத்துலக மகளிர் தின எழுச்சி ஊர்வலத்தில் கலந்து கொண்ட பொதுமக்களால் பல்வேறு சுலோகங்களை கோசித்தவண்ணம் பதாகைகளையும் கொண்டு சென்றனர்.

கொண்டுசெல்லப்பட்ட அப்பதாகைகளில் காணப்பட்ட சுலோகங்கள் சில வருமாறு: (5ஆம் பக்கம் பார்க்க)

## மாபெரும் பொதுக்கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும்

பேரணியில் கலந்து கொண்ட பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட மாபெரும் பொதுக் கூட்டம் நேற்று மாலை 6.30 மணியளவில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. (5 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாநாட்டில் பெண்கள் எழுச்சி நாள்

(யாழ்ப்பாணம்)

அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு நேற்று யாழ் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பொதுக் கூட்டங்களும் எழுச்சியூட்டும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சி (5 ஆம் பக்கம் பார்க்க)

# பெண்ணினத்தின் எழுச்சியே விடுதலையைப் பெற்றுத்தரும்

## -மகேந்திரராசா

(நமது நிருபர்)

''பெண்ணடிமைத்தனம், பெண்ணொடுக்குமுறை என்பன உலகளாவிய அளவில் அழித்தொழிக்கப்பட வேண்டிய சக்திகளாகும். பெண்களுக்கான விடுதலை என்பதும் பெண்ணுரிமை என்பதும் அவற்றின் இலக்கு நோக்கிய பாதையில் பெண்களின் எழுச்சிப் பயணத்தின் மூலம்தான் பெறமுடியும்''

பிரதித்தலைவர் திரு. கோ. மகேந்திரராசா அனைத்துலகப் பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியினர் கிளிநொச்சியில் நேற்று நடத்திய தமிழீழப் பெண்கள் மாநாட்டில் உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.

பிரதித்தலைவர் திரு கோ. மகேந்திரராசா ஆற்றிய உரையின் முழு விபரமும் வருமாறு:

மிகவும் நெருக்கடியான இன்றைய சூழ்நிலையிலும் அனைத்துலகப் பெண்கள் நாளை, சிறப்புடன் கொண்டாடுவதற்காக, எழுச்சியுடனும், உறுதியுடனும் கூடியிருக்கின்ற உங்களுக்கு முதலில் எனது மகிழ்ச்சியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உலகளாவிய அளவிலே அரைப்பங்கினரான பெண்கள் நீண்டகாலமாக அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் பலர் இன்று விழிப்புணர்வு பெற்று தமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்பதற்காகவும், ஆண்களுக்கு நிகராக மதிப்புடனும், பெருமையுடனும் வாழ வேண்டும் என்பதற்காகவும், போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். (6 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளுடன் பேசாமல் தமிழர்பிரச்சினையைதீர்க்கமுடியாது

## — சென்னையில் நெவில் கனகரத்தினா

(சென்னை)

'விடுதலைப் புலிகளே மிகவும் பலம் வாய்ந்த சக்தி. ஏனைய தமிழ்க்குழுக்களுக்கு தமிழ்ப்பகுதிகளில் தளம் கூட இல்லை. எனவே, விடுதலைப் புலிகள் பங்கு பற்றாமல் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது'' என இந்தியாவிற்கான சிறிலங்கா தூதுவர் நெவில் கனகரத்னா தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பேசிய சிறிலங்கா தூதுவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய அரசு 'உல்பா' தீவிரவாதிகள் விடயத்தில் பின்பற்றும் அணுகுமுறையையே இங்கும் பின்பற்றப்படும் என்றார்.

திரு. பிரபாகரன் சம்பந்தப்பட்ட சென்னை நீதிமன்ற விசேட உத்தரவு தொடர்பாக சிறிலங்கா இந்தியாவுடன் ஒத்துழைத்துவருகிறது. அதற்காக புலிகளுடன் சிறிலங்கா அரசு பேசமாட்டாது என்று அர்த்தம் கொள்ள முடியாது.

திரு. பிரபாகரன் சிறிலங்கா ... தால் அவரை இந்திய அரசிடம் கையளிக்கலாம். அவர் சிறிலங்கா அரசிடம் இல்லை என மேலும் அவர் தெரிவித்தார்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## லில்லி வில்லி பருத்தித்துறையில்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைக்கு நேற்று வந்து சேர்ந்த லில்லி வில்லி கப்பலில் தபாற் பொதிகளும், அடையாள அட்டைகளும் எடுத்து வரப்பட்டிருக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒரு கப்பல் கொழும்பில் இன்று அல்லது நாளை உணவுப் பொருள்களுடன் புறப்பட இருப்பதாகவும்

# 42 அப்பாவித் தமிழர்கள் இராணுவத்தால் படுகொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் நாற்பத்திரண்டு அப்பாவித் தமிழ் மக்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

குடும்பிமலை சிறிலங்கா இராணுவ முகாமை அண்டியுள்ள பகுதியில நடாத்தப்பட்ட தேடுதல் வேட்டையின் போது சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யபபட்ட இத் தமிழ் மக்கள் கொடூரமான சித்திரவதையின் பின்னர் கடந்த திங்கட்கிழமை ... கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இப் படுகொலை முயற்சியில் இருந்து பலத்த காயங்களுடன் தப்பிவந்த நாற்பத்திரண்டு வயதுடைய மணியம் என்பவர் இப் படுகொலை பற்றிய தகவல்களை வெளியிட்டிருக்கிறார்.

# 42 அப்பாவித் தமிழர்கள் இராணுவத்தால் படுகொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் நாற்பத்திரண்டு அப்பாவித் தமிழ் மக்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

குடும்பிமலை சிறிலங்கா இராணுவமுகாமை அண்டியுள்ள பகுதியில நடாத்தப்பட்ட தேடுதல் வேட்டையின் போது சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யபபட்ட இத் தமிழ் மக்கள் கொடூரமான சித்திரவதையின் பின்னர் கடந்த திங்கட்கிழமை சுட்டும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இப்படுகொலை முயற்சியில் இருந்து பலத்த காயங்களுடன் தப்பி வந்த நாற்பத்திரண்டு வயதுடைய மணியம் என்பவர் இப்படுகொலை பற்றிய தகவல்களை வெளியிட்டிருக்கிறார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் பேசிய சிறிலங்கா தூதுவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய அரசு 'உல்பா' தீவிரவாதிகள் விடயத்தில் பின்பற்றும் அணுகுமுறையையே இங்கும் பின்பற்றப்படும் என்றார்.

திரு. பிரபாகரன் சம்பந்தப்பட்ட சென்னை நீதிமன்ற விசேட உத்தரவு தொடர்பாக சிறிலங்கா இந்தியாவுடன் ஒத்துழைத்துவருகிறது. அதற்காக புலிகளுடன் சிறிலங்கா அரசு பேசமாட்டாது என்று அர்த்தம் கொள்ள முடியாது.

திரு. பிரபாகரன் சிறிலங்கா அரசின் தடுப்புக்காவலில் இருந்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## லில்லி வில்லி பருத்தித்துறையில்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைக்கு நேற்று வந்து சேர்ந்த லில்லி வில்லி கப்பலில் தபாற் பொதிகளும், அடையாள அட்டைகளும் எடுத்து வரப்பட்டிருக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒரு கப்பல் கொழும்பில் இன்று அல்லது நாளை உணவுப் பொருள்களுடன் புறப்பட இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

# அரசின் நடவடிக்கையை எதிர்த்து தோ.தொழிலாளர் வேலைநிறுத்தம்

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களுக்கு நூறுரூபாய் சம்பள உயர்வு வழங்கப்படாததையும், தோட்டங்களைத் தனியார் மயப்படுத்துவது தொடர்பாக தொழிற் சங்கங்களுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்த தவறியதையும் எதிர்த்து ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை நடத்த தோட்ட தொழிற்சங்க கூட்டு நிர்வாகக் குழு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக இந்த நிர்வாகக்குழு விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில்; தோட்டங்களை அரசாங்கம் தனியார் மயப்படுத்துவது தொடர்பாக தொழிற்சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி தொழிலாளர் தொழிற் சங்கங்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு கூட்டு ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளவும், இன்றைய காலகட்டத்திற்கு ஏற்ப தோட்டத்தொழிலாளர்கள் சம்பந்தமான புதியதோர் சட்டத்தை இயற்றுவதென்றும், அரசாங்கம் அளித்த வாக்குறுதியை நடைமுறைப் படுத்தாமல் தன்னிச்சையாக தோட்டங்களை தனியார் மயமாக்கும் போக்கு கண்டிக்கத் தக்கது.

அத்தோடு, தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைச்செலவு அதிகரிப்புப்புள்ளி 418-க்கு மேல் ஒவ்வொரு புள்ளிக்கும் நாளொன்றுக்கு ஆறு சத வீதம் வழங்கப்பட வேண்டுமென்றும் 1983 ஆம் ஆண்டு தேயிலை சம்பள நிர்ணயசபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை இதுவரை அரசாங்கம் நடைமுறைப் படுத்த வில்லை. இந்த விசேட அலவன்ஸை காலம் தாழ்த்தாது அரசாங்கம் வழங்க வேண்டும்.

அதே நேரத்தில் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட விசேட சம்பளஉயர்வை தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கவில்லை. அது மாத்திரமல்ல 1992 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட நூறுரூபாய் சம்பள உயர்வை இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை.

கடுமையான வரட்சி வேலை நாட்கள் குறைப்பாலும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பாலும் தோட்டத் தொழிலாளர்கள் சொல்லொணா கஷ்டங்களை எதிர் நோக்கியுள்ள இந்த நேரத்தில் அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்கள் விடயத்தில் பாரபட்ச கொள்கையை கடைப்பிடித்து வருகிறது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே வேளை அடையாள வேலை நிறுத்தத்திற்கான திகதியை வரும் 11 ஆம் திகதி கூடி நிர்ணயிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## சமனலவேவ நீர்த்தேக்கம் பயன்தருவது சந்தேகம்

### - யப்பான் பேராசிரியர் கௌசு சுமி

இலங்கை மின்சார சபை யப்பானிய உதவியுடன் அமைக்கும் சமனல வேவத் திட்டத்தின் பயன் குறித்து மூத்த யப்பானிய பேராசிரியர் ஒருவர் சந்தேகம் தெரிவித்தார்.

யோகோமா நகர் பல்கலைக்கழகச் சர்வதேச சட்டப் பேராசிரியர் கௌசுசுமி கருத்துத் தெரிவிக்கையில் 1990 ஒக்டோபரில் அணை கட்டும் வேலை முடிந்து விட்டது என்றும், சுண்ணக்கல் படிவங்கள் அதிகமாகக் காணப்படுவதால் வலப்பக்க அணையில் பாரிய வெடிப்புண்டாகி நீர்த்தேக்கத்தில் நீரை நிரப்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்

வெடிப்பைச் சரிசெய்யும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும், நீர்க் கசிவைத் தடுப்பதற்கு உத்தரவாதம் எதுவும் இல்லை என்றார் அவர். யப்பான் அரசாங்கத்திடம் மேலதிகமாக 3 264 மில்லியன் யென் கடனாகப் பெற்று இத் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

சமனலவேவ திட்டத்தின் மண் படிவம் பலவீனமானது என்பதை முன் கூட்டியே தெரிந்திருந்தும் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. சிறிலங்கா, இங்கிலாந்து, யப்பானிய அரசுகள் கொதமலைத் திட்டத்திலிருந்து அனுபவத்தைப் பெறத் தவறி விட்டன என்றும் பேராசிரியர் சுமி மேலும் தெரிவித்தார்.

யப்பானிய யென் உதவியுடன் இத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது 1986 இல் 14,500 மில்லியன்யென்னும், 1987 இல் 13, 920 மில்லியன் யென் பணமும் யப்பான்அரசினால் வழங்கப்பட்டது.

1966 இல் இருந்து 1979 வரை அமெரிக்க, ரஷ்ய, சுவிடிஸ், யப்பானிய மற்றும் இங்கிலாந்து நிபுணர்களின் ஆலோசனையைப் பெற்று இத்திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

## வடக்கே பொருள் கடத்தல்; 7பேர் மீது வழக்கு?

(கொழும்பு)

வடக்கில் விடுதலைப் புலிகளுக்குத் தடைசெய்யப்பட்ட ஆபத்தான பொருள்களைக் கடத்திச் செல்ல முயற்சித்த குற்றத்திற்காக ஏழு பேர் மீது வழக்குத் தாக்கல் செய்யச் சட்டமா அதிபர் ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. குற்றவாளிகள் என்று கருதப்படுபவர்களில் மூன்று பேர் இராணுவத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

மற்ற நான்கு பேரும் வவுனியாவையும், அனுராதபுரத்தையும் சேர்ந்த வர்த்தகர்களாவர்.

அவசர காலச்சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டங்களின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டிருக்கும் இவர்களது நிலை பற்றி அனுராதபுர நீதி மன்றில் சில முக்கிய சாட்சிகள் வழங்கிய வாக்குமூலங்களை சட்டமா அதிபர் பரிசீலனை செய்த பிறகே முடிவெடுக்கப்படும்.

மேற்படி குற்றச் செயல்களில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் சென்ற வருடம் 24 பேர் கைது செய்யப்பட்டனர்.

இராணுவத்தினர் மூவரும் தடைசெய்யப்பட்ட பொருள்களை வடக்கு-கிழக்கிற்கு எடுத்துச் செல்ல அனுமதிப் பத்திரம் வழங்கினர் என்ற குற்றத்திற்காகவே கைது செய்யப்பட்டனர்.

மூன்று இராணுவத்தினர் உட்பட ஏழுபேர் மீதும் தொடர்ந்து விசாரணையை மேற்கொள்ளுமாறு சட்டமா அதிபர் பணித்துள்ளார்.

## சுகாதாரவாரம்

பருத்தித்துறை பிரதேச சபையின் சுகாதார வாரம் சுகாதாரத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன்5ஆம் திகதி புதன்கிழமை புலோலியில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டு சுகாதாரவார நிகழ்ச்சிகள்நடைபெற்றுவருகின்றன. இச் சுகாதார வார நிகழ்ச்சிகளை பருத்தித்துறை பிரதேசசபைநிர்வாக அதிகாரி திரு. பெ. கனகசபாபதி ஆரம்பித்து வைத்தார்.

பருத்தித்துறை பிரதேச சபையின் பல்வேறு பகுதிகளிலும் சனசமூகநிலையங்களின் அனுசரணையுடனும் பொது மக்களின் ஒத்துழைப்புக்களுடனும் சுகாதாரவார நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சுற்றாடல் சுகாதாரபாதுகாப்புக்கள் சிரமதான நடவடிக்கைகள், கிராமிய மக்கள் மத்தியில் சுகாதாரப் பழக்க வழக்கங்களுக்கான எழுச்சி நடவடிக்கைகள் கருத்தரங்குகள் என்பன இச் சுகாதார வாரநிகழ்ச்சிகளிலே முக்கியத்துவம் பெற்றுவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.(25)

## 3 இளைஞர்களை விடுவிக்க இராணுவம் இணக்கம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் கடந்த 1990 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்ட மூன்று தமிழ் இளைஞர்களை விடுவிக்க இராணுவம் இணக்கம் தெரிவித்துள்ளது.

11.7.90 இல் இராணுவ சுற்றிவளைப்பின்போது கைது செய்யப்பட்ட கதிர்காமு சுப்பிரமணியம் (வயது.48) பொன்னையா சற்குணபாலன் (வயது 12) கந்தையா சிவதாசன் (வயது 22) ஆகியோரே விடுதலை செய்யப்படவுள்ளனர்.

இவர்களை விடுதலை செய்யுமாறு கோரி குடும்பத்தினர் ஆட்கொணர்வு மனுக்களைத் தொடுத்திருந்தனர் இதனைத் தொடர்ந்து இம் மூவரும் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இம்மாதம் 12 ஆம் திகதி ஆஜர் செய்யப் பட்டு விடுவிக்கப்படுவர் என தெரிவிக்கப்படுகிறது.

## மலையக இளைஞர் கைது மீண்டும் ஆரம்பம்

மலையகஇளைஞர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்வது மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

நுவரெலியா பகுதியில் வாவித் தோட்ட இளைஞர்கள் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பதுளைக்கு கொண்டுசெல்லப் பட்டுள்ளனர்.

இதே போன்று பசறை ஒப்டன் தோட்டத்தைச் சேர்ந்த ஒரு தமிழ் இளைஞர் பட்டாவத்தையில் வைத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது இவ்வாறிருக்க சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பதுளையில் கடந்த பல மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று பெண்களும் கொழும்புக்கு மாற்றப் பட்டுவிட்டதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

## அங்குரார்ப்பணம்

நாயன்மார்கட்டு கிராமத்தில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. நல்லூர் உதவி அரசாங்க அதிபர் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், இப்பகுதி கிராம சேவையாளர் ஆகியோர் முன்னிலையில்நடைபெற்ற இவ் அங்குரார்ப்பண விழா கடந்த புதன் கிழமை நடைபெற்றது. இதில் கு.கமலாஜினி தலைவராகவும் ச.சுபத்திரா சி பிறேமினி ஆகியோர் உபதலைவர்களாகவும் த.சிவசோதி செயலாளராகவும் மா சுகந்தினி ச.பானுமதி பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் 7 பேர் நிர்வாகசபை உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## வரி விளம்பரம்

**கொம்பியூட்டர் கல்வி**

Computer Basic திங்கள், புதன் வகுப்புக்கள் ஆரம்பகாலமாணவர்களுக்குகந்தது புதிய பிரிவு ஆரம்பம் 11 03 92-10.30 மணி School of Business Administraion 16, 3 ஆவது குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சி 4025)

## ஆறு பேர் கைது

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து இருபத்தியாறு லட்சம் ரூபா பெறுமதியான புடைவைகள் கடத்தி வந்த ஆறு இலங்கைப்பிரஜைகள் சுங்கத்திணைக்களத்தினரால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளனர்.

இப்புடைவைகளானசாரம், சேலைவகைகள் ஆகியவற்றை இரண்டு படகுகளில் கடத்தி வந்தபோதே இவ் அறுவரும் பிடிக்கப்பட்டனர்.

## இரணைமடுக்குளக் குறியீட்டுப் பதிவேடு - 1992

கிளிநொச்சி மாவட்ட இரணைமடு நீர்ப்பாசன திருத்தப்பட்ட குளக்குறியீட்டுப் பதிவேடு பின்வரும் நிலையங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

- ★ காணிநிருவாகத் திணைக்களம். கச்சேரி.
- ★ நீர்ப்பாசனத் திணைக்களம்.
- ★ உதவி அரசாங்க அதிபர் பணிமனை, கிளிநொச்சி/கண்டாவளை.
- ★ கமநலச்சேவை நிலையம், இராமநாதபுரம்/ உருத்திரபுரம்/கிளிநொச்சி.
- ★ இரணைமடு திட்டமுகாமையாளர் பணிமனை.

பங்காளர்கள் பார்வையிட்டு திருத்தங்கள் இருப்பின் 31.03.92 ஆம் திகதிக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறு வேண்டப்படுகின்றனர்.

க. பொன்னம்பலம்
மாவட்டஆணையர்/அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

04.03.92

(சி-4027)

## நினைவு கூருகின்றோம்

## 1992-03-09

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் முஸ்லிம் ஊர்காவல் படையினர் மீதான நடவடிக்கையை மேற்கொண்டு விட்டுத்திரும்பி வருகையில் 64ஆம் கட்டைப்பகுதியில் எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கியதில் எம்மைப்பிரிந்த

★ **பவ்வா** (தம்பாப்பிள்ளை பத்தக்குட்டி - பள்ளிக் குடியிருப்பு, மூதூர், திருக்கோணமலை)

அம்பாறை, கல்முனைப்பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 3 தமிழர்கள்

தமிழீழக்கடற்பரப்பில் (மயிலிட்டி) தொழிலுக்குச் சென்றபோது சிறிலங்கா கடற்படையினரால் படகு மூழ்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட 2 கடற்றொழிலாளர்கள்

1987ஆம் ஆண்டு நாவற்குழியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய
**சிவா** (வேலுப்பிள்ளை சிவராசா - குடமியன், வரணி)

1988ஆம் ஆண்டு கல்வியங்காட்டில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய
**ரவி** (கார்மேகம் சண்முகராசா - கண்டி)

1991ஆம் ஆண்டு மாவிட்டபுரத்தில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய
**லெப்.வீரா** (தம்பிமுத்து தர்மசீலன் - ஏறாவூர் - 5, மட்டக்களப்பு)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் பவ்வா ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி/4026)

நல்லூர் [illegible] நூலகம்
மாநகர [illegible]
யாழ்ப்பாணம்

# தமிழீழப் பெண்களுக்கு எதிரான வன்முறை உடன் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்

## -- மகளிர் மாநாட்டில் தீர்மானம்

தமிழீழப் பெண்ணினத்துக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்படும் சகல வன்முறைக் கொடுமைகளும் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

''தமிழீழப் பெண்களின் தாயகப் பூமியினது பூகோள ஒருமைப்பாடும் பிரதேச தனித்துவமும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்.''

இவ்வாறு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினரால் நடத்தப்பட்ட மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறிப்பிடுகின்றன.

அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் விபரம் வருமாறு:

தமிழீழ மக்களின் தேசிய தன்னாட்சி உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்.

எமது தலைவர்களுக்கு எதிராகவும், எமது விடுதலை இயக்கத்துக்கு எதிராகவும் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபாண்டமான விசமப் பிரசாரங்களை இந்திய தமிழ்நாடு அரசுகள் நிறுத்திக் கொள்வதுடன் தமிழக சிறைகளில் வதைகளுக்கு உள்ளாகி வரும் எமது போராளிகளை விடுதலை செய்ய வேண்டும்.

தமிழகத்தில் தஞ்சம் புகுந்த தமிழீழ அகதிகளை வலுக்கட்டாயமாகத் திருப்பி அனுப்புவதை இந்திய அரசு நிறுத்த வேண்டும்.

தமிழீழத் தாயகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் தமிழீழ மக்களுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளையும் சிறிலங்கா அரசு உடன் நிறுத்த வேண்டும்.

தமிழீழப் பெண்ணினத்துக்கு எதிராகப் பிரயோகிக்கப்படும் சகல ஒடுக்குமுறை வடிவங்களும் ஒழிக்கப்பட வேண்டும்.

சீதனக் கொடுமை ஒழிக்கப்பட வேண்டும். இதனை ஒழிப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

பொருளாதாரத் தங்கு நிலையிலிருந்து பெண்கள் விடுவிக்கப்பட வேண்டும்.

பெண்கள் இழிவு படுத்தும் பழைமைவாத, பிற்போக்கு வாத சித்தாந்தங்கள், கருத்துருவங்கள் கண்ணோட்டங்களுக்கு எதிராக தீவிரமான பிரசாரப் போராட்டம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

# பெண்களின் பிரத்தியேக பிரச்சினைகளுக்கு விஞ்ஞான ரீதியான ஆய்வு அவசியம்

பெண் ஆய்வு நிறுவனம் ஒன்றை அமைத்து பெண்கள் எதிர்கொள்ளும் பிரத்தியேக பிரச்சினைகள் குறித்து விஞ்ஞான ரீதியான ஆய்வுகளை மேற்கொள்ளுதல், இந்த ஆய்வுக் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் சில வேலைத் திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்துதல்.

''பெண்களின் சுதந்திரம் தனித்துவம், சுயாதீனமான பொருளாதார வாழ்வு ஆகியவற்றைப் பேணி வளர்ப்பதும் அவர்களது வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதுமான பொருளாதாரத் திட்டங்களை அமைத்து அவற்றைப் படிப்படியாக விரிவாக்கம் செய்தல் வேண்டும்''

இவ்வாறு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினரால் முன்வைக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் குறிப்பிடுகின்றன அவர்களால் முன்வைக்கப்பட்ட வேலைத் திட்டங்களில் பின்வரும் அம்சங்களும் காணப்படுகின்றன.

ஆணாதிக்க வன்முறை, பாலியல் வன்முறை, மற்றும் அநீதிகள், கொடுமைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவியளிக்கும் நோக்குடன் மகளிர் நலன்புரி மன்றங்களை நிறுவுதல்.

சமுதாயத்தில் நிலவும் சுகாதார சமூகப் பிரச்சினைகளை கிராமிய மட்டத்தில் எதிர்கொள்ளும் நோக்கில் சுகாதார சமூகத் தொண்டர்களை உருவாக்குதல். இந்தத் தொண்டர்களுக்கு நோய்த் தடுப்பு சுகாதாரம், குழந்தை வளர்ப்பு போன்ற விடயம் பற்றி பயிற்சி அளிப்பதற்காக சுகாதார சமூக சேவைப் பயிற்சி நிலையம் ஒன்றை அமைத்தல்.

பெண்களின் கல்வி வளர்ச்சியை நோக்காகக் கொண்டு வளர்ந்தோர் கல்வித் திட்டம் ஒன்றை உருவாக்குதல், பாடசாலை, கல்லூரி நிர்வாகத்தின் ஒத்துழைப்புடன் இத்திட்டத்தை அமுலாக்குதல்.

சீதனக் கொடுமையை ஒழிப்பதற்கும், சீதனம் வழங்கித் திருமணம் செய்யும் முறையைத் தடுப்பதற்கும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

பெண்களை இழிவுபடுத்தும் பழைமைவாதசித்தாந்தங்கள், கண்ணோட்டங்களுக்கு எதிராக தீவிரமான பிரசாரப் போராட்டத்தை மேற்கொள்ளுதல்

# சீதன முறையைத் தடைசெய்ய சட்ட நடவடிக்கை தேவை

பெண்ணின் கௌரவத்தையும், சுதந்திரத்தையும் இழிவுபடுத்தி பெண்ணை விலைப் பொருளாக்கும் சீதனக் கொடுமைக்கு எதிராகப் போராடுவது.

எமது விடுதலை இயக்கத்தினரும், மகளிர் முன்னணியினரதும் வழிகாட்டலின் கீழ் தமிழீழப் பெண்ணினத்தை அணி திரட்டி, அரசியல் மயப்படுத்தி தேசிய விடுதலைக்காகவும், சமூக விடுதலைக்காகவும் போராடுவது. இவையே விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினரால் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கொண்டாடப்பட்ட மாநாட்டின் முக்கிய குறிக்கோள்களும் நோக்கங்களுமாகும். இம்மாநாட்டின் ஏனைய குறிக்கோள்களும், நோக்கங்களும் பின்வருமாறு அமைகின்றன.

சமூக, அரசியல், பொருளாதார வாழ்வில் தமிழீழப் பெண்கள் மீது பிரயோகிக்கப்படும் சகல ஒடுக்குமுறை, சுரண்டல் முறை வடிவங்களுக்கு எதிராகப் போராடுவது.

இன ஒடுக்குமுறையாலும் போர்ச்சூழ் நிலைகளினாலும் பாதிக்கப்பட்ட பெண்கள் விதவைகள், ஆதரவற்றோரின் வாழ்க்கை நிலையைமேம்படுத்தும் வகையில் பொருளாதார வேலைத்திட்டங்களை அமைத்து செயற்படுத்துதல்

பிற்போக்கான பழைமைவாதச் சித்தாந்தங்களிலிருந்து தோற்றம் கொண்டு பெண்ணினத்தை இழிவு படுத்திவரும் கருத்துருவங்கள், படிமங்கள், தவறான பார்வைகளுக்கு எதிராகப் போர் தொடுப்பதுடன் பெண்கள் பற்றிய முற்போக்கான எதார்த்தமான கண்ணோட்டத்தை முன்னெடுப்பது.

பாலியல் வேறுபாட்டின் அடிப்படையில் தொழிற்றுறையில் பெண்களுக்குக் காட்டப்படும் பாரபட்சத்துக்கு எதிராகப் போராடுவது.

ஆணாதிக்கத்துக்கு எதிராகவும், ஆண்கள் பெண்ணினத்தின் மீது கட்டவிழ்த்து விடும் வன்முறை வடிவங்களுக்கு எதிராகவும் போராடுவது.

பெண்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து பெண்கள் மத்தியில் சமூக அரசியல் விழிப்புணர்வைத் தோற்றுவிக்க உழைப்பது

நிர்வாகத் திறன், கூட்டுழைப்பு' தலைமைத்துவம் போன்ற ஆளுமைப் பண்புகளை மகளிர்மத்தியில் வளர்த்துவிட உழைப்பது.

அடக்குமுறை, சுரண்டல் முறை, மற்றும் சமூக அநீதிகளுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தி வரும் உலகப் பெண்ணினத்துக்கு ஆதரவு வழங்குவது.

உலகெங்குமுள்ள முற்போக்கான மகளிர் அமைப்புகளுடன் தொடர்பை ஏற்படுத்தி நட்புறவை வளர்ப்பது.

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அரசியல், பொருளாதாரம், சமூகநிலை போன்ற அனைத்துத்துறைகளின் மேம்பாட்டுக்காகவும் பெண்ணினம் தனது பங்களிப்பை இன்று செலுத்துகிறது இதற்கான அரசியல்-சமூக உரிமைகளை நிலைநாட்டுவதற்கான போராட்டங்கள் கடந்தநூற்றாண்டிலே எழுச்சி பெற்றுவிட்டன. பெரும்பாலான நாடுகளிலே இன்று, பெண்கள் அரசியலில் ஈடுபடும் -தேர்தலில் பங்குபெறும் உரிமையை வென்றெடுத்துள்ளனர்.

பெண்கள் எத்தகைய அடக்கு முறைக்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள்? எந்தெந்த உரிமைகளை இழந்திருக்கிறார்கள்? பெண்ணுரிமைகளை பறித்து- பெண்களை அடக்குமுறைக்குள்ளாக்கி இருப்பவர்கள் யார்? இவற்றுக்கு துணைபோகின்ற சக்திகள் எவை? என்பதை எல்லாம் அறிவியலடிப்படையில் ஆராய்ந்து -அவற்றுக்கு எதிரான முறையான போராட்டங்களை நடத்துவதன் மூலமே பெண்கள்விடுதலையையும்- தமது உரிமைகளையும் நிலைநாட்ட முடியும்.

காலங்காலமாக பெண்களை ஒடுக்கி வரும் ஆணாதிக்க சக்திகளும், அந்தச் சக்திகளுக்கு அடங்கிப் போவதையே மரபு எனவும் பண்பாடு எனவும் கொண்டொழுகும் பெண்களின் அறியாமையும் தான்பெண்விடுதலைக்கு, பெண் உரிமைக்கு பெரும் தடையாக உள்ள சக்திகளாகும்.

முதலில் எத்தகைய ஒடுக்கு முறைகளுக்கு தாம் ஆட்பட்டிருக்கின்றோம் என்பதை அறிய முடியாமலிக்கும் பெண்களின் அறியாமையை போக்குவதே பெண்ணுரிமைப் போரின் முதல் இலக்காக கொண்டு பெண் விடுதலை இயக்கங்கள் செயற்பட வேண்டும்.

அத்தகைய பெண்களின் அறியாமை இருளை அகற்றி சமுதாயத்தில் அரைப்பங்கினரான பெண்களின் சக்தியை, விழிப்பும், எழுச்சியும் கொள்ள வைத்து விட்டால், பெண் விடுதலை என்பது தொலைவில் உள்ள இலக்கல்ல.

எனவே இன்று பெண்ணுரிமைக்காக- பெண் விடுதலைக்காக போராட புறப்பட்டிருப்பவர்கள் முதலில், அறியாமையிலும்- மூடத்தனத்திலும் மூழ்கி இருக்கும் பெண்களை அவற்றிலிருந்து விடுவிக்கின்ற வகையிலே வேலைத்திட்டங்களை அமைத்துச் செயற்படுத்த வேண்டும்.

இத்தகைய அடிப்படையிலேயே-தமிழீழப் பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி- அவர்களது சமூக வாழ்வை மேம்பாடடையச் செய்வதற்குரிய உருப்படியான செயற்திட்டங்களை தீட்டி-அவற்றை நடைமுறைப்படுத்துகின்ற வகையில் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினர் இந்த மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பெண்விடுதலையை- பெண்கள் மேம்பாட்டை இலக்காக வைத்து மாநாட்டை நடத்துவதற்கு உலகிலேயே தகுதி வாய்ந்தவர்களில் முதன்மையானவர்களாக விடுதலைப் புலிகள் மகளிர் அணியினர் இருக்கின்றார்கள் என்றால் அது மிகையாகாது.

தமது தாய் மண்ணை மீட்க -- தேசிய விடுதலையை வென்றெடுக்க ஆயுதம் ஏந்தி-- இன்று பல்லாயிரக்கணக்கான தமிழீழப் பெண்கள் களத்தில் குதித்துள்ளார்கள்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக ''அச்சம் தான் பெண்களுக்கு அணிகலன்; வீரம் ஆண்களின் தனிச் சொத்து'' என்றிருந்த நிலையை -- மரபை உடைத்தெறிந்துவிட்டு ஆண்களுக்கு நிகராக ஏன் ஆண்களையே விஞ்சுகின்ற அளவுக்கு -- களத்திலே தமது வீரத்தை பெண்கள் வெளிப்படுத்தி வருகிறார்கள். தமிழீழ மண்மீட்புப் போரிலே -- தமிழீழ இளம் பெண்களின் திரளான பங்களிப்பானது -- தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு உருக்கைப் போன்ற உறுதியை அளித்துள்ளது

உலகமே வியக்கும் வகையில் ஆற்றல் படைத்த-வீரம் படைத்த எமது பெண்கள் அணியினர், இருளில் மூழ்கி இருக்கும், பெண்களை விழிப்புறச் செய்து -- அவர்களை தட்டி எழுப்பி அணிதிரட்டினால் பெண் ஒடுக்கு முறை சக்திகளும் -- ஆணாதிக்க சக்திகளும் தமிழீழத்தில் எளிதில் அழித்தொழிக்கப்பட்டு விடும்.

இந்தியத் துணைக்கண்டத்தின்விடுதலைக்காக ஆயிரக்கணக்கான பெண்கள் ஆயுதம் ஏந்தியும்-அமைதி முறையிலும் போராடி இருக்கிறார்கள் தமது உயிரைக் கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால், விடுதலையடைந்த இந்தியத் துணைக்கண்டத்தில் பெண்ணொடுக்கு முறை இன்றும் உச்சக் கட்டத்தில் நின்று தாண்டவமாடுகிறது

இந்தியத்துணைக்கண்டத்தின் தேசிய விடுதலைக்காக உழைத்த பெண்கள், பெண் விடுதலைக்காகச் சிந்திக்காததன் விளைவே இந்தியப் பெண்களின் இன்றைய இழிவு நிலைக்குக் காரணமாகும்.

சோவியத் ஒன்றியத்தில் கூட, அதன் வெற்றிக்காக உழைத்த பெண்கள், சோவியத் புரட்சியின் வெற்றிக்கு பின்னர்- அரசியல் அடிப்படையில் கூட முழுமையான நிலையை அடையவில்லை

தேசிய விடுதலையுடன் பெண்விடுதலையையும் வென்றெடுப்பதன் மூலமே எதிர்காலத்தில் தேசிய விடுதலையைப் பெறும் அதே நேரத்தில்பெண் விடுதலையையும் பெற முடியும்.

இன்று தேசிய விடுதலைப் போராட்டத்தில் எழுச்சியுடன் குதித்துள்ள பெண்கள் தேசிய விடுதலையைப் பெற்ற பின்-- தமிழீழத்தில் மீண்டும் ஒரு முறைபெண்ணொடுக்கு முறைக்கு எதிராக போராடுகின்ற நிலை ஏற்பட்டுவிடக்கூடாது இதற்காகவேஎமது தலைவர்-- எமது தேசிய விடுதலைப் போராட்டத்துடன். பெண்களின்விடுதலையையும் ஒன்றிணைத்து பெண் ஒடுக்குமுறை இல்லாத -- பெண்--ஆண் சமத்துவம் கொண்ட -- சாதி வேறுபாடுகளையப்பட்ட புரட்சிகர சமூக அமைப்பு ஒன்றைப் படைப்பதற்கான முழு விடுதலைக்கான தளமமைத்திருக்கிறார்.

எமது தலைவரின் உயரிய இலட்சியத்தினடிப் படையிலே -- வேணவாவின் அடிப்படையிலே இந்த மாநாட்டை நடத்திக்கொண்டிருக்கிறீர்கள். வெறுமனே மாநாட்டை நடத்தி-- திட்டங்கள் தீட்டி தீர்மானங்கள் போடுவதால் மட்டும் ஒன்றும் விளைந்து விடப் போவதில்லை.

தீட்டப்படுகின்ற திட்டங்களை முழுமையாக -- முறை

(6 ஆம் பக்கம் பார்க்க)

'ரஷ்யாவின் விஞ்ஞானத்தின் எதிர்காலம் மயிரிழையில் ஊசலாடுகிறது' என்ற தலைப்பிலான கட்டுரையின் தொடர்ச்சி நாளைய பத்திரிகையில் வெளிவரும்.

# லோக்சபையில் எதிர்க்கட்சிகளை காங்கிரஸ் கட்சி சமாளிக்கும்

## - நரசிம்மராவ் நம்பிக்கை

(டில்லி)

லோக்சபையில் அரசுக்கு எதிராக எழும் நெருக்கடிகளை காங்கிரஸ் கட்சி சமாளித்து விடும் என்று பிரதமர் பி. வி. நரசிம்மராவ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தற்போதைய காங்கிரஸ் அரசுக்கு பெரும்பான்மை வலுவுக்கு ஆறு உறுப்பினர் எண்ணிக்கை குறைவாக இருந்த போதிலும் கூட லோக் சபாவில் எதிர்க்கட்சிகளின் முயற்சியை காங்கிரஸ் முறியடிக்கும் என்று பிரதமர் பி. வி. நரசிம்மராவ் நாத்பூரில் செய்தியாளர்களிடம் பேசுகையில் நம்பிக்கை தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் அரசு தோல்வியடைந்தால் பார்லிமென்ட்டைக் கலைக்கப்போவதாக சொல்லியிருப்பது தமது கட்சியின் எல்லா உறுப்பினர்களும் சபைக்கு கட்டாயமாக வரவேண்டும் என்பதை வலியுறுத்துவது தான் இதற்கு அர்த்தமாகும் என்றும் குறிப்பிட்டார்.

# காங்கிரஸ் அரசைக்காக்க உறுதிமொழி தரவில்லை

## - எல். கே. அத்வானி

(டில்லி)

காங்கிரஸ் அரசைக் காப்பாற்றும் உறுதிமொழி எதையும் பாரதீய ஜனதாக் கட்சி வழங்கவில்லை என்று அக்கட்சியின் தலைவர் எல். கே. அத்வானி கூறியுள்ளார். அகமதாபாத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில் நடப்பு பட்ஜெட் கூட்டத்தொடரில் தமது கட்சி கண்காணிப்பு அமைப்பாக செயல்படும் என்றும், வேலை வாய்ப்பு விலையேற்றம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் இரண்டு திருத்தங்களை தமது கட்சி கோருமெனவும் தெரிவித்தார்.

அத்துடன், தேர்தல் வாக்குறுதிகளை ஆளும் கட்சி நிறைவேற்றவில்லை எனவும், பொருளாதார கொள்கைகளில் நரசிம்மராவ் புதிய வழி காட்டியிருக்கிறார் ஆனால் பொருளாதாரத்தை சர்வதேச மயப்படுத்தப்படுவதை தமது கட்சி ஆதரிக்கவில்லை எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை பார்லிமென்ட்டில் வாக்கெடுப்பின் போது அரசு தோற்கடிக்கப்பட்டால் அதன் நிலையற்ற கொள்கைகள், குறிப்பாக பொருளாதாரக் கொள்கைகள் தான் அதற்கு காரணமாக இருக்கும் என்று பாரதீய ஜனதா தலைவர்களில் ஒருவரான ஏ. பி. வாஜ்பாய் குறிப்பிட்டார். எனினும் நரசிம்மராவ் அரசு தற்போதைய நெருக்கடியை சமாளித்து விடுமெனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

அமெரி. அதிபரின்

# ஆத்திரத்தைத் தூண்டினார் நிருபர் வேலை இழந்தார்

(வாஷிங்டன்)

செய்தியாளர் மாநாடொன்றில் கேள்விக்கு மேல் கேள்வி கேட்டு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் ஆத்திரத்தைக் கிளறிய அமெரிக்க தொலைக்காட்சி நிருபர் ஒருவர் தமது வேலையை இழந்துள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற போதைப்பொருள் உச்சி மாநாட்டின்போதுதான் முரட்டுத்தனமாக செயல்பட்டதாக கூறி விலக்கப்பட்டதாக பிரயன்கரெம் என்ற இந்த நிருபர் சான் அன்டோனியா பத்திரிகையிடம் தெரிவித்தார்

லத்தீன் அமெரிக்கத் தலைவர்கள் கலந்து கொண்ட இம்மாநட்டில் ஜோர்ஜ் புஷ்டம் நிர்ப்பந்தித்து பதில் பெற முயன்ற போதே புஷ் ஆத்திரமடைந்தார்.

மற்றைய மூன்று தலைவர்களிடமும் ஏதாவது கேள்வி கேளும் இல்லாவிட்டால் அமர்ந்து கொள்ளும் என புஷ் ஆத்திரத்துடன் அந்த நிருபரிடம் தெரிவித்தார்.

இவ் மாநாடு ஆரம்பமாகு முன்னர் ஒரு தலைவரிடம் இரண்டு கேள்விகள் கேட்க மட்டுமே அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

ஆயினும் புஷ்ஷிடம் அதிகப்படியான கேள்விகள் கேட்கப்பட்டதால் ஆத்திரமடைந்து காணப்பட்டதுடன் செய்தியாளர் மாநாட்டின் முடிவில் உச்சி மாநாட்டில் கலந்து கொண்டவர்களிடம் நடந்த சம்பவத்தையிட்டு மன்னிப்பு கேட்டுக்கொண்டார்.

# திரா. கழக ஊர்வலத்தில் பிரபாகரன் படம்

சேலத்தில் அண்மையில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாடு தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட ஊர்வலத்தில் தலைவர் பிரபாகரனின் படங்கள் எடுத்துச் செல்லப்பட்டன.

இந்த ஊர்வலத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் தலைவர் பிரபாகரனுக்கும் ஆதரவு தெரிவித்து கோஷங்கள் எழுப்பப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# கொரிய கப்பலை தடுத்து நிறுத்த உத்தரவு

சிரியா அல்லது ஈரானுக்கு ஏவுகணைகளை ஏற்றிச் செல்வதாக அமெரிக்காவால் கருதப்படும் வடகொரிய கப்பலொன்றை தடுத்து நிறுத்த தயார் நிலையில் இருக்கும்படி அமெரிக்க கடற்படைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் விடுத்துள்ளார்.

குறித்த வடகொரிய கப்பல் இப்பொழுது இந்து சமுத்திரப் பகுதியில் உள்ளதாகவும் அது ஆபிரிக்காவிற்கு சென்று கொண்டிருப்பதாகவும் வடகொரியா தெரிவித்துள்ளது.

இதிலுள்ள ஏவுகணை சிரியாவிற்கு கிடைக்குமானால் இஸ்ரேலை தாக்குவது சிரியாவிற்கு சுலபமானதாகிவிடும் என அமெரிக்கா அச்சம் தெரிவித்துள்ளது.

## சட்ட நடவடிக்கை

ஜே.கே.எல்.எப். எனப்படும் ஜம்முகாஷ்மீர் விடுதலை முன்னணியின் தீவிரவாதிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பாகிஸ்தானின் ஆளுகைக்கு உட்பட்ட ஆசாத் காஷ்மீரின் பிரதமர் அறிவித்துள்ளார்.

# நொச்சிமோட்டைமோதலில் 3 புளொட் பலி

(வவுனியா)

கடந்தவெள்ளிக்கிழமைநொச்சிமோட்டையில் ஏற்பட்ட மோதலில் மூன்று 'புளொட்' உறுப்பினர்கள் விடுதலைப் புலிகளால் சுட்டுக்கொல்லப் பட்டதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை நொச்சிமோட்டை சிறிலங்கா காவலரணில் இருந்து தடைகளை அகற்ற வெளியேறிய இராணுவ சிப்பாய் ஒருவரும் சமூகவிரோத கும்பலைச் சேர்ந்த ஒருவரும் மிதிவெடியில் சிக்கி கால்களை இழந்தனர்.

# ஏறாவூர் தமிழ் மீனவர்கள் வெட்டிக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் ஆறுமுகத்தான் குடியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற நான்கு தமிழ் மீனவர்கள் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர்

இத்துயர சம்பவம் கடந்த மாதம் 29 ஆம் திகதி நடைபெற்றது. இளையதம்பி சோமநாதன் (55 வயது), தாமோதரம் சீவரத்தினம் (வயது22), இராசையா பேரின்பராசா (வயது 38), கதிர்காமத்தம்பி கோவிந்தசாமி (வயது 25) ஆகிய நால்வருமே ஊர்காவல் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

# யாழ். இளைஞர் நீர்கொழும்பில் கொலை

(குருநகர்)

யாழ். இளைஞர்களை நீர்கொழும்புப் பகுதியில் கொலை செய்யப்பட்டுள்ளார் என்ற தகவல் நேற்று முன் தினம் அவரது குடும்பத்தாருக்கு தெரிய வந்துள்ளது.

அவ்வாறு கொலையுண்டவர் பாஷையூர் 3 ஆம் குறுக்கு வீதியைச் சேர்ந்த பேசி பிராங்கிளின் (வயது 20) என்று தெரிவிக்கப்படுகிறது.

நீர்கொழும்புப் பகுதி பேக்கரி ஒன்றில் வேலை செய்து வந்த மேற்படி இளைஞர் கடந்த 4ஆம் திகதி புதன் கிழமைகொலைசெய்யப்பட்ட தகவல் பங்குத் தந்தை ஒருவரூடாக குடும்பத்தினருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வேறெந்த விபரமும் குடும்பத் தினருக்குகிடைக்கவில்லை. (21

# இளம் குடும்பப் பெண் கடலில் வீழ்ந்து தற்கொலை

(கொழும்பு)

கணவனுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக மனமுடைந்த இளம் பெண் ஒருவர் கடலில் வீழ்ந்து உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை பம்பலப்பிட்டியில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரஸ்தாப இளம்பெண் பம்பலப்பிட்டியில் வசித்து வந்தார் என்றும் கனடாவில் இருந்து அண்மையில் நாடு திரும்பிய இளைஞர் ஒருவரை மூன்று வாரங்களுக்கு முன் மணம் செய்திருந்தார் என்றும் விசாரணையை மேற்கொண்ட பம்பலப்பிட்டி பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சிநேகிதி ஒருவரைப் பார்த்து வரச்செல்வதாகக் கூறி வீட்டிலிருந்து வெளியேறியவர் கடற்கரைக்குச் சென்று கடலில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளார் எனவும் பொலிசார் தெரிவித்தனர்.

# வெளிநாட்டு விசா மோசடி; உயரதிகாரி மீது விசாரணை

(கொழும்பு)

வெளிநாடு ஒன்றுக்கு விசா வழங்குவதில் ஆறு இலட்சத்து எண்பதினாயிரம் ரூபா மோசடி செய்த குற்றச்சாட்டின் பேரில் கொழும்பிலுள்ள அந்நாட்டின் விசா வழங்கும் அதிகாரி அலுவலகத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் பொலிஸ் விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து இலங்கையர் இருவர் பெற்ற விசா மோசடியானது என நெதர்லாந்தில் கண்டுபிடிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டதை அடுத்தே கொழும்பு மோசடி தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எஸ். ஆறுமுகம் இவரை விசாரித்து வருகிறார்

இச்சந்தேக நபர் பதினேழு பேருக்கு தமது அதிகாரியின் கையொப்பத்தை தானே வைத்து விசா வழங்கியதாக விசாரணையிலிருந்து தெரிய வருகிறது. பதினேழு இலங்கையரிடம் இருந்து இவர் நாற்பதினாயிரம் ரூபா பெற்றுக் கொண்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சேதமடைந்த

# ஆலயங்கள் திருத்துவதற்கு நிதி ஒதுக்கீடு இல்லை

(மட்டக்களப்பு)

சேதமடைந்த வழிபாட்டுத் தலங்களை திருத்துவதற்கு இந்த ஆண்டில் வட கிழக்கு மாகாண சபை நிதி ஒதுக்கவில்லை என்று மாகாண கலாசார உதவிப் பணிப்பாளர் செ. எதிர்மன்னசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதனால் கடந்த வருடத்தில் நிதி வழங்கப்பட்ட ஆலயங்களுக்கு இரண்டாம் கட்ட நிதியைக் கூட வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும்,

சேதமடைந்த வழிபாட்டுத் தலங்களைத் திருத்த கடந்த வருடத்தில் 25 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது என்றும்,

வட - கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய எட்டு மாவட்டங்களிலுமுள்ள வழிபாட்டுத் தலங்களை திருத்துவதற்கு ஐம்பது லட்சம் ரூபாய் தேவையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பொலிஸ் அதிகாரிகள் செய்தி கொடுக்கத் தடை

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகள் பத்திரிகைகளுக்குச் செய்தி கொடுப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. இது குறித்த பொலிஸ் மாஅதிகாரி சுற்று நிருபம் பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பிற்குப் பங்கம் விளைவிக்கும் எனக்கருதப்படும் செய்திகளை வெளிபிடுவதற்கே இந்தத்தடை எனத் தெரிவிக்கப் படுகிறது.

கொலை, களவு, விபத்து போன்ற குற்றவியல் சம்பவங்கள் தொடர்பான செய்திகளை வெளியிடலாம். ஆனால் இச் செய்திகளை வெளியிடுவதன் மூலம் விசாரணைக்கு அல்லது நாட்டின் பாதுகாப்புக்கு இடையூறு ஏற்படும் என்று கருதினால் அச் செய்திகளை வெளியிடுவதையும் தவிர்க்க வேண்டும் என்று பொலிஸ் மாஅதிபர் சுற்று நிருபத்துக்கு விளக்கம்கொடுத்துள்ளார்.

# உறவினர் தொடர்பு கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலையில் கடந்த ஒருமாதமாகச் சிகிச்சை பெற்றுவந்த பாலகிருஷ்ணன் பெருமாயி (ஸ்கந்தபுரம், கரும்பாலை) நேற்று முன்தினம் அங்குமரணமானார். இவரது உறவினர்களை உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையுடன் தொடர்பு கொள்ளுமாறு நோயாளர் நலன்புரிச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(ச)

பயண ஆவணமின்றி

# இத்தாலி பயணமானோரில் 30பேர் கைது; 5பேர் மரணம்

(கொழும்பு)

முறையான பயண ஆவணங்களின்றி, போலியான சிங்கள‌ப் பெயர்களைக் கொண்ட பாஸ்போட்டுடன் பயணம் செய்த முப்பத்தைந்து தமிழர்கள், இத்தாலிக்குள் நுழைய முயன்ற சமயம் கைது செய்யப்பட்டிருப்பதாக தெரிய வந்துள்ளது.

இந்தக் குழுவினருடன் பயணம் செய்த வேறு ஐவர் அதிக குளிர் மற்றும் பட்டினி காரணமாக மரணமடைய நேர்ந்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிந்தனைக்கு

புரிந்துணர்வு நிலவுமாயின்,
கடுமையான சோதனையிலும்
அது முறிவுஇன்றி நிலைத்து நிற்கும்
- மகாத்மா காந்தி

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 09-03-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

# ஆழமான புரிந்துணர்வில் ஆண்-பெண் சமத்துவம்

"பொருளுலகத்தை எந்தெந்த வடிவங்களில் சீரமைத்தாலும், ஆண் பெண் மனோவுலகில் பெண்மை பற்றிய அவர்களது கருத்துலகில் ஆழமான மாற்றங்கள் நிகழாமல் பெண் சமத்துவம் சாத்தியமாகப் போவதில்லை. பெண்ணினத்தின் விடுதலை நோக்கிய பாதையில், அவர்களது சமூக பொருளாதார வாழ்வு மேம்படுவது அவசியம் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆயினும், அதேவேளை ஆண் பெண் உறவிலும் அந்த மானசீக உலகிலும் மாற்றங்கள் தேவை. உண்மையான சமத்துவம் என்பது ஆண் - பெண் உறவில் எழும் ஆழமான புரிந்துணர்வில்தான் சாத்தியமாகிறது" இவ்வாறு அனைத்துலக பெண்கள் தினத்தையொட்டி தலைவர் வே. பிரபாகரன் விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

பெண்ணினத்தின் சமத்துவம், சுதந்திரம், கௌரவம் என்பன குறித்து தலைவர் பிரபாகரன் வெளியிட்டுள்ள கருத்தானது ஆழமானதும், கடந்தகால உலக அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டதும் ஆகும்.

பெண்ணினம் தனது உரிமைகளுக்காக சுமார் ஒரு நூற்றாண்டு காலமாகவே குரல் கொடுத்துவருகின்றது. இதனால், சில உரிமைகளையும் வென்றெடுத்துள்ளது என்பதையும் மறுப்பதற்கில்லை. இதில் அடிப்படை மனித உரிமைகள், அரசியல் சுதந்திரத்தையும், கல்வி, தொழில் வாய்ப்புகளையும் பெற்றுக் கொள்ள முடிந்தது. ஆனால், பெண்களின் பிரச்சினைகள் எவையும், எங்கும் முழுமையாகத் தீர்ந்ததாக இல்லை. அவர்கள் அடக்குமுறையிலிருந்து விடுபட்டதாகவும் இல்லை.

இதேவேளை, எழுபதுகளில் பெண்ணுரிமைக் குரல் எப்பொழுதும் இல்லாதவாறு உலகின் பலபாகங்களிலும் பலமாக எதிரொலித்தது. ஐ. நா விலும் அது பிரதிபலித்தது, 1975ஆம் ஆண்டு மெக்சிக்கோவில் ஐ. நா. சபை நடத்திய அனைத்துலகப் பெண்கள் மாநாட்டின் தீர்மானத்திற்கு அமைய 1976 - 1985 ஆம் ஆண்டு வரையிலான 10 ஆண்டு காலத்தை பெண்கள் முன்னேற்றத்திற்கான ஆண்டுகளாக அறிவித்தது. அத்தோடு அக்காலத்துக்குள் நடைமுறைப்படுத்துவதற்கென பெண்களுக்கெதிரான அநீதிகளை ஒடுக்கும் திட்டங்களையும் முன்வைத்தது.

ஆனால், இப்பத்தாண்டு காலத்தில் பெண்களின் உரிமைகள், நலன்கள் எந்தளவிற்குப் பாதுகாக்கப்பட்டன என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது. அத்தோடு எழுபதுகளில் வீறுகொண்டு எழுந்த பெண்ணுரிமைப் போராட்டங்கள்-குறிப்பாக மேற்குலகில்-எண்பதுகளில் ஓர் மந்த நிலையை அடைந்தன. அவ்வாறானால், நடந்ததென்ன? பெண்களின் உரிமைகள் தொடர்பாக நடத்தப்பட்ட போராட்டங்கள் இலக்கைத் தவற விட்டு விட்டனவா?

ஆம், எழுபதுகளில் எழுந்த பெண் விடுதலைப் போராட்டங்கள் சற்று இலக்குத் தவறிவிட்டன என இன்று சில பெண் விடுதலை முன்னோடிகள் தெரிவிக்கின்றார்கள். அவர்கள் பெண்கள் தம்மீது இழைக்கப்படும் அடக்குமுறைகள் நீங்கி உரிய சுதந்திரமும் சமத்துவமும்,கௌரவமும் கிடைப்பதற்காகப் போராடுவதற்குப் பதிலாகப் பெண்கள் ஆண்களுக்கு எதிராகவும், ஆண்கள் அனுபவிக்கும் வசதிகள். கேளிக்கைகள் என்பவற்றைப் போன்று தாமும் அனுபவிக்க வேண்டும் என முற்பட்டதன் விளைவே எண்பதுகளில் பெண்ணுரிமை இயக்கங்களின் வளர்ச்சி மந்த கதியை அடைந்ததற்குக் காரணம் எனக் குறிப்பிடுகின்றார்கள்.

இந்நிலையில் இவ்விவகாரம் தொடர்பாக தலைவர் பிரபாகரனின் அறிக்கை தெளிவான கருத்தை முன்வைத்துள்ளது. ''ஆண் ஆதிக்க ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் என்பது ஆண்களுக்கு எதிரான போராட்டம் அல்ல. அது ஆணாதிக்க அறியாமைக்கு எதிரான கருத்துப் போராட்டமாகும்'' இதனைத் தெளிவாக இரு சாராரும் புரிந்துகொள்ளாதவிடத்து பெண் உரிமையைப் பெண்கள் நிலை நிறுத்துவதோ, ஆண்கள் தமது அடக்குமுறை சிந்தனையை மாற்றிக் கொள்வதோ ஏற்பட்டுவிடப் போவதில்லை.

ஆணும், பெண்ணும் இயற்கையில் வெவ்வேறு இயல்புடையவர்கள் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் இவர்கள் இருவரும் மனிதர்கள். இவர்களுக்கு இடையில் பால் வேறுபாட்டால் எழும்பிரச்சினைகள் நீங்க வேண்டுமானால், தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டது போன்று, ''ஆண்-பெண் உறவின் ஆழமான அர்த்தத்தையும், முக்கியத்துவத்தையும் ஆணினம் புரிந்து கொள்ளும் போதுதான் ஆணாதிக்கமும், அதனால் எழும் அதிகார அடக்குமுறையும் அகன்றுவிடவாய்ப்பு ஏற்படும்.'' அவ்வாறானால் இதற்கு ஆணின் அறியாமைக்கு எதிரான கருத்துப் போராட்டத்திற்கு பெண்களுக்கு தெளிவான விழிப்புணர்வு தேவை.

# தமிழர் தேசியஇனப்பிரச்சினை சுதந்.கட்சி புதிய நிலைப்பாடு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி புதிய கொள்கைப் பிரகடனம் ஒன்றை வெளியிடத் தீர்மானித்துள்ளது. வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்படுவதையும் ஜனநாயகத்தைஏற்றுக்கொண்டால் புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்துவதையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய கொள்கைப் பிரகடனத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதில் மேலும் நாட்டின் இறைமையைப் பாதிக்காத வகையில் சுயநிர்ணய உரிமையை தீர்மானிக்கும் உரிமை வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு இருக்க வேண்டும் என்பதை சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் கொள்கையை ஆராய நியமிக்கப்பட்ட ஒன்பதுபேர் கொண்ட நடவடிக்கைக் குழு பதினொரு பக்கங்களைக் கொண்ட அறிக்கையொன்றைத் தாக்கல் செய்துள்ளது: இந்த அறிக்கை தொடர்பாக ஆராய்வதற்கெனக் கூடிய கட்சியின் மத்திய குழு இத் தீர்மானங்களை ஏற்றுக்கொண்டுள்ளது.

இக்குழுவின் கூட்டத்தில் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்து வடக்கு-கிழக்குப் பகுதியில் ஏனைய அரசியல் கட்சிகளும் செயற்பட அனுமதித்தால் சுதந்திரக்கட்சி புலிகளோடு பேச்சுவார்த்தையை நடத்தலாம் எனவும், அதிகார பரவலாக்கல் மூலம் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதை ஆதரிக்கும் எனவும் தீர்மானிககப்பட்டுள்ளது.

அத்துடன்இந்திய அரசாங்கத்தோடுசிறந்த நட்புணர்வைக் கொண்டிருக்க வேண்டுமெனவும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கபபட்டுள்ளது.

# தொழில் நுட்பக் கல்லூரி இறுதியாண்டுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

1991 / 1992ஆம் ஆண்டிற்கான தொழில்நுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சைகள் மார்ச் மாதம் 16 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

16ஆம் திகதி சுருக்கெழுத்தும் (சீ 79-80) தேசிய வர்த்தகக் கல்விச் சான்றிதழும் (சீ 83) நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விடுதலைப்

திரு. பிரபாகரனைப் பிடிக்கும் முயற்சியில் இந்தியாவும், சிறிலங்காவும் தமது விரல்களைச் சுட்டுக் கொண்டன. அவரைப் பிடிக்க நவீன நடவடிக்கைகள் தேவை எனவும் அவர் தெரிவித்தார்.

ஏதாவது தந்திரம் செய்து தப்பித்துக் கொள்ளக் கூடிய நற்பண்புகளுடன் கூடிய மனிதன் பிரபாகரன். இந்திய அமைதி காக்கும் படையினாலும் சிறிலங்கா பாதுகாப்புப் படையினாலும் பிரபாகரனை கைது செய்ய முடியவில்லை என்றார்.

பிரபாகரன் பாதுகாப்பான மறைவிடத்தில் வெளியில் தலைகாட்டாமல் இருந்தால் யாருடன் பேச்சு வார்த்தை நடத்துவது என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் நாம் மற்றப் பிரதிநிதிகளுடன் பேசலாம் என்றார்... அன்ரன் பாலசிங்கம், கிட்டு அல்லது மாத்தயா வெளியில் இருந்தாலும் கூட அரசு விடுதலைப் புலிகளில் கடும் போக்காளரிடமிருந்து மிதவாதிகளையும், நியாயமானவர்களையும் தெரிந்து இவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி நாட்டின் முழுமைக்குத் தீங்குஏற்படாத முறையில் ஏற்புடைய ஒரு சமரசத் தீர்வுக்கு வரலாம் நாங்கள் நிறைய இரத்தம் சிந்தியுள்ளோம். இனியும் இரத்தம் சிந்துவதற்கில்லை என்றும் நெவில் கனகரத்[illegible] தெரிவித்தார்.

தொண்டமானின் யோசனைகளில் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைப்பது என்ற யோசனையே தடைக்கல்லாக இருக்கிறது

எமது கரையோரத்தில் மூன்றில் இரண்டு பகுதியைத் தமிழீழத்திற்கு கையளித்துவிட முடியாது. சிங்களப் பெரும்பான்மையினர் தெரிவிக்கும் அபிப்பிராயத்தின் எதிரொலியே இதுவாகும்.

தொண்டமானின் யோசனைகளில் குறிப்பிடத்தக்க சில விடயங்களும் உள்ளன. இணக்கம் காணபபடாத விடயங்கள் பேச்சுவார்த்தைப் போக்கில் மாற்றப்படலாம்.

வடக்கு - கிழக்கு இணைப்பு யோசனை மாற்றப்படலாம் அல்லது நிரந்தரமானகொலைகளை விட நிரந்தரமான இணைப்பு நல்லதென மக்கள் நினைக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

## வரலாறு

டைகளை ஏந்தியவாறு இப் பேரணியில் கலந்து கொண்டனர். இரணைமடுச் சந்தியில் இருந்து ஆரம்பமாகிய இவ் வெழுச்சி ஊர்வலம் கண்டி வீதியூடாக மாலை ஆறுமணியளவில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தை வந்தடைந்தது.

## மாபெரும்

வன்னிபபிராந்திய அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ரதி தலைமையில் நடைபெற்ற இப் பொதுக் கூட்டத்தில் இலக்கிய ஓவியப் போட்டிகளில பரிசு பெற்றோருக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## யாழ்.

களில் நூற்றுக் கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

வடமராட்சி, தென்மராட்சி தீவகம், வலிகாமம் ஆகிய பிரிவு ரீதியாக இந்த நிகழ்வுகள் நடாத்தப்பட்டன.

வலிகாமம் பிரிவில் மாலை 7.00 மணியளவில் மருதனாமடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் பொதுக் கூட்டமும்கலைநிகழ்ச்சிகளும்இடம் பெற்றன. வடமராட்சிப் பிரிவில் மாலை 7.00 மணியளவில் பருத்தித்துறை பழைய பஸ் நிலைய மைதானத்தில் மாபெரும் பொதுக் கூட்டமும் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. தென்மராட்சிப் பிரிவின் பொதுக் கூட்டம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது தீவகப் பிரிவினரின் பொதுக்கூட்டம் இரவு 8.00 மணியளவில் நாவற்குழி சின்ன அருள் சனசமூக நிலையத்திற்கு அண்மையில் உள்ளமைதானத்தில் நடைபெற்றது.

அதேவேளை விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் பிரிவினரினால் மாலை 7.00 மணியளவில் பாசையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டு மைதானத்தில் பொதுக் கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டது.

அனைத்துப் பகுதிகளிலும் நடைபெற்ற பொதுக்கூட்டங்களிற்கும் நூற்றுக்கணக்கான மக்கள் அணிதிரண்டு வந்திருந்தனர். விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவுப் பிரமுகர்களும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்களும் இக் கூட்டங்களில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினார்கள். (க)

## பிரயாணி

அண்மையில் ஸ்தலயாத்திரை ஒன்றை மேற்கொண்டு இந்தியா சென்றிருந்த வங்கி உயர் அதிகாரியின் மனைவி கொண்டு சென்ற பிரயாணிகள் காசோலையை இந்திய வங்கிகள் பணமாக்க மறுத்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

அவருடன் சென்ற மற்ற யாத்திரிகர்கள் தொமஸ்குக் நிறுவனம் வழங்கிய காசோலைகளைத் தம்முடன் எடுத்துச் சென்றார்கள். இவர்களுடைய பிரயாணிகள் காசோலைகள் எவ்வித தடையுமின்றி மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன.

## உணவுப்பொருள்

வுச் சங்கங்கள் மற்றும் தனியார் விற்பனையாளர்களுடன் விரைவில் கலந்துரையாடல் ஒன்றை நடத்த இருப்பதாக யாழ். அரசாங்க அதிபர் கூறியுள்ளார்.

இக் கலந்துரையாடலுக்கான இடமும் திகதியும் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும்] கூறியுள்ளார்.

## பேரணியில்

தலைவனின்வழியிலேஓரணி திரள்வோம். தமிழீழம் காக்கும் போரினை வெல்வோம்.

அடுப்பங்கரையும் அவல வாழ்வும் எம்மோடு முடியட்டும். இனிப் பிறக்கின்ற காலங்கள் பெண்ணின் விடிவோடு மலரட்டும்; சீதன அரக்கனை தீயிட்டெரிப்போம்.

சீரான வாழ்வு மலர்ந்திட உழைப்போம்; பேரம் பேசி எம் வாழ்வினை அழியோம்; வீரம் கொண்டு எம் தேசத்தை மீட்போம்; எங்கள் மண்ணிது; நிமிர்ந்து நிற்போம் எல்லைகள் மீட்கவே இணைந்து செல்வோம்.

ஆணுக்கு பெண் இங்கே சமானம் என்று உரைப்போம்; அவனியில் எம்பணி உணர்ந்து நின்று உழைப்போம்; பெண்ணினம் எல்லாம் மெல்லினம் என்ற பேதமை மாற்ற அனைவரும் எழுவோம்; மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையினை உடைப்போம், அன்னியர் ஆதிக்கம் அழித்தே வெல்வோம், பெண்ணினம் இங்கே பேதமை மறந்தது புதுயுகம் படைத்திடும் போரிலே இணைந்தது.

## மகளிர்

வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார்.

நண்பகலளவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு அனுப்பிவைத்தவாழ்த்துச் செய்தியை மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் மாநாட்டில் வாசித்தார். இறுதியாக விடுதலைப் புலிகள் பிரதித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா உரைநிகழ்த்தினார். இதன்போது வன்னி மாவட்ட விசேட தளபதி தீபனும் அருகில் இருந்தார். இறுதியாக வன்னிப் பிராந்திய மகளிர் முன்னணி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ரதியின் நன்றியுரையுடன் மாநாடு முடிவடைந்தது.

அகில உலக மகளிர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி நகரமே விழாக் கோலம் பூண்டிருந்தது. வீதிகள் தோறும் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்ததுடன் மஞ்சள், சிவப்பு நிற கொடிகளும் பறக்க விடப்பட்டிருந்தன. பெண் அடிமை விலங்கொடித்து தமிழீழத் தேசியக் கொடியை நாட்டுவது போல் சித்தரிக்கப்பட்ட வீதி வளைவுகள் பிரதான வீதியின் பலபகுதிகளில்கட்டப்பட்டன.

# வடக்கு-கிழக்கில் சமாதானம் ஐ. நா. அரசிடம் வற்புறுத்து

(ஜெனிவா)

வடக்கு கிழக்குப் பகுதிகளின் நிலையான சமாதானத்திற்கு வழி வகுக்கக் கூடிய வகையில், மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை மதிக்கும் கோட்பாடுகளை மையமாகக் கொண்டு சகல கட்சிகளுடனும் அரசியல் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை தொடருமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு சிறிலங்கா அரசாங்கத்தை வலியுறுத்தியிருக்கிறது.

ஜெனிவாவில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 48 ஆவது கூட்டத் தொடரில் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கையில் நிலவும் மனித உரிமை மீறல் குறித்து கண்காணிக்க நியமிக்கப்பட்ட செயற்பாட்டுக் குழுவின் அறிக்கையிலே இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் குறித்து ஆணைக்குழு அக்கறையுடன் நோக்குகிறது.

காணாமல் போவோர் தொடர்பான புகார்கள், அறிவிப்புக்கள் அறிவிக்கப்படுகின்றன.

மனித உரிமைகள் முற்று முழுதாக பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தும் முயற்சிகளை மேலும் தீவிரப்படுத்துமாறு சிறிலங்கா அரசாங்கத்தைக்கோரும் ஆணைக்குழு சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனிதாபிமான சட்டவிதிகளை முற்றாக மதிக்குமாறும் கேட்டுக் கொள்கிறது.

## கூட்டம் நடத்த முயன்ற நெடுமாறன் கைது

(சென்னை)

சென்னையில் தடையை மீறிக் கூட்டத்தை நடத்த முயற்சித்த ப. நெடுமாறன் நேற்று கைது செய்யப்பட்டார். அவருடன் மேலும் எழுபது பேர் கைது செய்யப்பட்டனர்.

தேசிய ஒருமைப்பாட்டுக்குப் பங்கம் விளைவிக்கும் என்று காரணம் காட்டி சென்னைப் பொலிசார் கடந்த வியாழக்கிழமை இந்த மாநாட்டிற்குத் தடை விதித்திருந்தனர்.

தடைச் சட்டத்தை மீறிக் கூட்டம் நடத்தச் சென்ற முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப. நெடுமாறனும் அவரது ஆதரவாளர்களும் சென்னை எழும்பூரில் கைது செய்யப்பட்டனர்.

மாநாட்டை நடத்துவதற்கு எந்தவித அனுமதியும் கோரப்படவில்லை என்று பொலிஸ் தரப்பில் சொல்லப்படுகிறது. ஜெயலலிதா அரசு கூட்டம், ஊர்வலம் ஆகியவற்றை நடத்துவதற்கு அண்மையில் தடை உத்தரவு பிறப்பித்தது தெரிந்ததே

## டிக்ஷிற் அமெரி. பயணம்

(டில்லி)

இந்தியாவின் வெளியுறவுச் செயலாளர் ஜே.என். டிக்ஷிற் அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இன்று வாஷிங்டன் செல்லவுள்ளார். இன்று புதுடில்லியில் இருந்து புறப்படும் டிக்ஷிற் அமெரிக்க வெளியுறவுத் துறையின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் வர்த்தகப் பிரதிநிதிகள் ஆகியோருடன் பல்வேறு பிரச்சினைகள் பற்றியும் விவாதிக்கவுள்ளார்.

அமெரிக்காவின் விசேட வர்த்தக சட்டமான 301 இன் கீழ் இரு நாடுகளுக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகள் பற்றி வர்த்தகப் பிரதிநிதி திருமதி சார்லிலாகோர்ள் உடன் டிக்ஷிற் பேச்சு நடத்தவுள்ளார்.

இதனிடையே இந்தியாவிற்கான அமெரிக்கத் தூதுவராக தோமஸ் பிக்கறிங் நியமனம் செய்யப்பட்டுள்ளார். சிரேஷ்ட அரசியல் பிரமுகரான இவரது நியமனத்தின் மூலம் இந்திய அமெரிக்க உறவுகள் நெருக்கமடையும் என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## கப்பல் விபத்தில் தாய்லாந்தில் 120 பேர் பலி

(பாங்கொக்)

தாய்லாந்தில் பயணிகள் கப்பலொன்று எண்ணெய்க் கப்பலுடன் மோதியதில் கப்பலில் இருந்த பயணிகள் குறைந்தது 120 பேர் நீரில் மூழ்கி இறந்தனர். இச்சம்பவம் நேற்று விடியற் காலை 5.45 மணியளவில் இடம்பெற்றது.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் குழந்தைகளும் பெண்களும் ஆவர், பயணிகள் கப்பலில் சுமார் 150 பேர் பயணம் செய்தனர் எண்ணெய்க் கப்பல் மோதியதில் பயணிகள் கப்பல் இரண்டாகப் பிளந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது. கப்பலின் அடித்தளத்தில் பயணம் செய்தவர்கள் பலர் என்ன நடக்கிறது என்று தெரியாமலே உயிரிழந்தனர் என்று கூறப்படுகிறது.

23 பயணிகள் உயிருடன் மீட்கப் பட்டனர்.

## நியூசிலாந்து, தென்னாபிரிக்கா நேற்று ஆட்டத்தில் வெற்றி

(பிரிஸ்பென்)

ஆர்க்லான்டில் நேற்று நடைபெற்ற உலகக் கோப்பைக்கான ஒரு நாள் கிரிக்கட்போட்டியில் நியூசிலாந்து மேற்கிந்திய அணியை தோற்கடித்துள்ளது. மேற்கிந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடி ஏழு விக்கட் இழப்பிற்கு இருநூற்று மூன்று ஓட்டங்களைப் பெற்றது. நியூசிலாந்து 48.3 ஓவர்களில் ஐந்து விக்கட் இழப்பிற்கு இருநூற்றி ஆறு ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

பிரிஸ்பேனில் நடைபெற்ற மற்றுமொரு ஆட்டத்தில் தென் ஆபிரிக்கா பாகிஸ்தானைத் தோற்கடித்தது. தென்னாபிரிக்கா ஏழு விக்கட் இழப்பிற்கு இருநூற்றிப் பதின்மூன்று ஓட்டங்களைப் பெற்றது. பாகிஸ்தான் முப்பத்தாறு ஓவர்களில் நூற்றித் தொண்ணூற்றி ஆறு ஓட்டங்களை மட்டுமே பெற்று தோல்வி கண்டது.

## 2 அதிகாரிகள் உட்பட மூன்று அதிரடிப்படைகாயம்

(மட்டக்களப்பு)

கல்முனையிப் சைக்கிளில் பொருத்தப்பட்டிருந்த வெடிகுண்டு ஒன்று வெடித்ததில் 4 பேர் படுகாயமடைந்தனர் என்று சொல்லப்படுகிறது. இவர்களில் மூவர் அதிரடிப் படை பொலிஸ் என்றும் இதில் இருவர் பொலிஸ் அதிகாரிகள் என்றும் தெரியவருகிறது.

இக்குண்டை செயலிழக்கச் செய்யப் பொலிசார் முயற்சித்த போதே இக் குண்டு வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது


## மரண அறிவித்தல்

### வடிவேலு நடராசா

காரைநகர் களபூமி வடிவேலு நடராசா 8-3-92 அன்று காலமானார். இவர் சின்னத்தம்பி வடிவேலு (முன்னைநாள்இ.போ.ச.நடத்துனர்) அவர்களின் அன்பு மகனாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று காலை 10-00 மணியளவில் மூளாய் மத்தி மூளாயில் நடைபெற்று தகனக்கிரியைகள் மூளாய் மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. வடிவேலு
(இ.போ.ச. முன்னாள் நடத்துனர்)

(சி/4028)


## பொருள் காட்சி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் நடந்துவரும் உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சி பலரின் வேண்டுகோளுக்கிணங்க இன்றும் நீடிக்கப்பட்டுள்ளது. இதனால் கல்லூரி இன்று நடைபெறாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## காங்கேசனுக்கு மேலும் லொறிகள்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறைமுகப் பகுதிக்கு இன்றும் எட்டு லொறிகள் செல்லவுள்ளன. இராணுவத்தினர் வசமிருக்கும் துறைமுகப் பகுதியில் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும் உணவுப்பொருள்களை எடுத்து வருவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் இந்த லொறிகள் புறப்பட்டுச் செல்லவுள்ளன.

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் இன்னமும் இரண்டாயிரத்து ஐந்நூறு மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் தேங்கியிருப்பதாகவும் தெரிய வருகின்றது

## கரவெட்டியில் மகளிர் தினம்

(யாழ்ப்பாணம்)

மகளிருக்கான நலன்புரி சட்டங்கள் ஏட்டளவில் இருப்பவை கூட இன்னமும் நடைமுறையில் இல்லை என்றும், மனத்தளவில் மாற்றம் ஏற்படுவதன் மூலமே பெண்விடுதலைக்கான அடித்தளம் இடப்படும் என்றும் யாழ். அரசாங்க அதிபர் மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

நேற்று கரவெட்டியில் பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் நடந்த சர்வதேச மகளிர் தின நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அரசாங்க அதிபர் இதனைத் தெரிவித்தார்.

## வலைப்பந்தாட்ட போட்டி

புனித சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் இன்று பிப 3 மணிக்கு இடம்பெறும் வலைப்பந்தாட்டபோட்டியில் பாடும் மீன் நீல அணி வைக்கிங்ஸ் அணியை எதிர்த்து ஆடும்.

தொடர்ந்தாற்போல் பி. ப. 4.30 மணிக்கு அரியாலை ஐக்கிய 'ஏ' அணி எவெறெஸ்ட் அணியை எதிர்த்து ஆடும்.

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் ஓர் அங்கமாகவே இந்த ஆட்டங்கள் இடம் பெறுகின்றன.

## பாராளுமன்ற தெரிவுக்குழு நல்ல தீர்வைக் காணும் - சபாநாயகர் நம்பிக்கை

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டு இருக்கும் பாராளுமன்ற தெரிவுக்குழு இப்பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வைக்காணும்என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக சபாநாயகர் எம். எச். முகமட் கூறியுள்ளார் அவர் மேலும் கூறுகையில் இந்த நம்பிக்கை சகலருக்கும் பிறக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டதுடன், நல்ல முடிவுக்கு வராதவிடத்து அது பல தீமைகளை மேலும் தோற்றுவிக்கும் என்பதைச் சகல மக்களும் உணர வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தெமட்டகொடவில் விபுலானந்த மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற விழாவொன்றில் பேசுகையிலேயே பாராளுமன்ற சபாநாயகர் முகமட் இதனைத் தெரிவித்தார்.

## கட்டைக்காட்டில் மேலும் ஒரு சடலமும் ஆயுதங்களும் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காட்டில் கடந்த வியாழனன்று சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது கொல்லப்பட்ட மேலும் இராணுவத்தின் ஒரு சடலம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனால் கைப்பற்றப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை பதினெட்டாக உயர்ந்துள்ளது.

அத்துடன் பல வெடிப் பொருள்களும், இராணுவப் பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றின் விபரம் வருமாறு:

★ ரி-56-2 ரக துப்பாக்கி -01
★ ரி-56 மகசின் -04
★ ஐ. எம் ரவைகள் -930
★ சப்பாத்து -01 சோடி
★ கிற் பாக் -01

## வட. கிழக்கு புனரமைப்பு 169.45 மில்லியன் தேவை - புனரமைப்பு அமைச்சு தகவல்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் புனரமைப்பு, புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு 169.45 மில்லியன் ரூபா நிதி அரசாங்க அதிபர்களால் கோரப்பட்டிருப்பதாக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளர் கிறிஸ்டி சில்வா தெரிவித்துள்ளார்

கொழும்பில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய கிறிஸ்டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

மன்னார் அரசாங்க அதிபர் 53 48 மில்லியன் ரூபாவினையும், வவுனியா அரசாங்க அதிபர் 50 97 மில்லியன் ரூபாவினையும், திருக்கோணமலை அரசாங்க அதிபர் 15 மில்லியன் ரூபாவினையும் கோரியுள்ளனர் என்றும், மட்டக்களப்பு, அம்பாறை 15 மில்லியன் ரூபாவினையும், யாழ்ப்பாண தீவுகளுக்கு 25 மில்லியன் ரூபாவும் தேவைப்படுகின்றதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

1987 ஆம் ஆண்டு முதல் இலங்கைக்கு இரண்டு பில்லியன் டொலர்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும், உதவி வழங்கும் நாடுகள் 493 பில்லியன் அமெரிக்க டொலர்களை (19720 மில்லியன் ரூபா) தந்துள்ளன என்றும், மேலும் 386 6 மில்லியன் டொலர்கள் கிடைக்கவுள்ளது என்றும், இதுவரை 180 மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தனியார் கல்வி நிலையங்களிடம் வேண்டுகோள்

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தினால் நடத்தப்படும் அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வு வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற உள்ளதால் வரும் 14, 15 ஆம் திகதிகளில் தனியார் கல்வி நிலையங்களை மூடி இத் தேர்வு சிறப்புற ஒத்துழைப்பை நல்குமாறு விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் தான் மாநாடு கூட்டப்பட்டதன் -- முழுமையான பயனைப் பெற முடியும்

இந்த மாநாட்டிலே தீட்டப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அடுத்த ஆண்டு நடத்தப்படும் மாநாட்டுக்கு முன்னதாக நிறைவான முறையிலே முழுமையான முறையிலே - நடைமுறைப் படுத்தப்படவேண்டும்.

அதற்குரிய ஆற்றலையும்-ஆர்வத்தையும் நீங்கள் கொண்டிருக்கிறீர்கள் எனவே, இந்த மாநாட்டினது நோக்கத்தின் முழுமையான பயனை அடுத்த மாநாட்டுக்கு முன்பதாக பெற்றுவிடமுடியும் என்ற நம்பிக்கையுடன் இந்த மாநாட்டின் முயற்சியும் - விளைவும் வெற்றிபெற வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

''புலிகளின் தாகம் தமிழீழத்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மரண அறிவித்தல்

## வடிவேலு நடராசா

காரைநகர் களபூமி வடிவேலு நடராசா 8-3-92 அன்று காலமானார். இவர் சின்னத்தம்பி வடிவேலு (முன்னைநாள் இ.போ.ச.நடத்துனர்) அவர்களின் அன்பு மகனாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று காலை 10-00 மணியளவில் மூளாய் மத்தி மூளாயில் நடைபெற்று தகனக்கிரியைகள் மூளாய் மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

சி. வடிவேலு

(சி/4028) (இ.போ.ச. முன்னாள் நடத்துனர்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அரசாங்க அதிபர் இதனைத் தெரிவித்தார்.

## வலைப்பந்தாட்ட போட்டி

புனித சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் இன்று பி ப 3 மணிக்கு இடம்பெறும் வலைப்பந்தாட்டபோட்டியில் பாடும் மீன் நீல அணி வைக்கிங்ஸ் அணியை எதிர்த்து ஆடும்.

தொடர்ந்தாற்போல் பி. ப. 4.30 மணிக்கு அரியாலை ஐக்கிய 'ஏ' அணி எவெறெஸ்ட் அணியை எதிர்த்து ஆடும்.

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் ஓர் அங்கமாகவே இந்த ஆட்டங்கள் இடம் பெறுகின்றன.

வினையும். திருக்கோணமலை அரசாங்க அதிபர் 15 மில்லியன் ரூபாவினையும் கோரியுள்ளனர் என்றும், மட்டக்களப்பு, அம்பாறை 15 மில்லியன் ரூபாவினையும், யாழ்ப்பாண தீவுகளுக்கு 25

## தனியார் கல்வி நிலையங்களிடம் வேண்டுகோள்

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தினால் நடத்தப்படும் அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வு வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெற உள்ளதால் வரும் 14, 15 ஆம் திகதிகளில் தனியார் கல்வி நிலையங்களை மூடி இத் தேர்வு சிறப்புற ஒத்துழைப்பை நல்குமாறு விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் தான் மாநாடு கூட்டப்பட்டதன் -- முழுமையான பயனைப் பெற முடியும்

இந்த மாநாட்டிலே தீட்டப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அடுத்த ஆண்டு நடத்தப்படும் மாநாட்டுக்கு முன்னதாக நிறைவான முறையிலே முழுமையான முறையிலே - நடைமுறைப் படுத்தப்படவேண்டும்.

அதற்குரிய ஆற்றலையும்- ஆர்வத்தையும் நீங்கள் கொண்டிருக்கிறீர்கள் எனவே, இந்த மாநாட்டினது நோக்கத்தின் முழுமையான பயனை அடுத்த மாநாட்டுக்கு முன்பதாக பெற்றுவிடமுடியும் என்ற நம்பிக்கையுடன் இந்த மாநாட்டின் முயற்யுசிம் - விளைவும் வெற்றிபெற வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''